Underground Railway Scheme

* 337 *Q.*—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU L. BALARAMAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the estimated cost for the underground Railway Scheme to be implemented in the City of Madras ; and

(*b*) the years within which the Government propose to complete this Scheme ?

பாதாள ரயில் திட்டம்

திரு. வில்சன் அப்பலோஸ் (திரு. எல். பலராமன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் அமைக்கப்படவிருக்கும் பாதாள ரயில் திட்டத்துக்கான செலவு மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) எத்தனை ஆண்டுகளில் இத்திட்டத்தை முடிக்க அரசு திட்டமிட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (ஆ) இப்பொருள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Temporary Staff of the Survey and Land Records Department

* 338 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any representation has been received in November 1971 from Surveyors and Draftsmen serving in the Survey and Land Records Department regarding the anomalies in the matter of absorption of temporary staff in regular service; and

(*b*) if so, the action taken thereon ?

1973 ஏப்ரல் 3]

நில அளவை—நில ஆவணங்கள் துறையில் உள்ள தற்காலிகப் பணியாளர்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தற்காலிகப் பணியாளர்களை முறையான பணியில் வைத்துக் கொள்வது தொடர்பான முரண்பாடுகள் குறித்து நில அளவை—நில ஆவணங்கள் துறையில் பணியாற்றும் நில அளவையாளர், வரைபட வரைவாளர் ஆகியோரிடமிருந்து 1971, நவம்பரில் முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இந்த முறையீடு 1971 நவம்பரில் அரசுக்குக் கிடைக்கப் பெற்றதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறுர்கள். 1973 வரையிலும் இந்தப் பரிசிலனை முடிவடையாமல், அரசு ஆணை வெளியிடாத நிலை இருக்கிறது. இதை துரிதப்படுத்தி உடனடியாக அரசு ஆணை வெளியிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த இலாகாவைச் சார்ந்த ஒருவர் உயர்நீதி மன்றத்திற்குச் சென்றுர். ஒரு ரிட் மனு உயர்நீதி மன்றத்தில் இருக்கிறது. அதில் காலதாமதம் இருக்கிறது. வேறு சிலவற்றையெல்லாம் அரசு வருவாய் துறை வாரியத்தோடு பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு முடிந்த பின் சிக்கிரம் ஒரு முடிவு செய்ய முடியும்.

Financial Assistance to the Flood Victims

* 339 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the financial assistance given to flood victims in the State during December 1972 and January 1973 ?

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படும் நிதியுதவி

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம் மாநிலத்தில், 1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலும், 1973 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்ட நிதி உதவியின் விவரங்கள் யாவை?